Ours bank with
Bank of Baroda

மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ்

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annamalai Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு	*மணி 55	* ஓசை 323	உள்ளூர் - 23.11.2026	திங்கட்கிழமை	விலை ரூ.4/-	பக்கங்கள்-4	Website : http://maduraimaninews.com
Madurai Edition	*Vol 55	* Issue 323	வெளியூர் - 24.11.2026	செவ்வாய்க்கிழமை	Price Rs. 4/-	Pages -4	Email: maduraimaninews@gmail.com

கார்த்திகையில் திருமண யோகம்!

SIDBI, NABARD வங்கிகளில் வேலைவாய்ப்பு!

RAC முறைக்கு முடிவா? ரயில்வே பரிசீலனை!

சபரிமலை: பக்தர்களுக்கு எச்சரிக்கை!

டேட்டா சென்டர்களுக்கு டிரம்ப் வரி மிரட்டல்!



வாஷிங்டன், நவ. 23–

அமெரிக்க நிறுவனங்கள் வெளிநாடுகளில் டேட்டா சென்டர்கள் அமைத்தால் "மிகக் கடுமையான வரி" விதிக்கப்படும் என அதிபர் டொனால்ட் டிரம்ப் எச்சரித்துள்ளார். அமெரிக்காவின் AI கணினித் திறனை சீனா பயன்படுத்துவதைத் தடுக்கவே இந்த நடவடிக்கை என அவர் கூறியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் டேட்டா சென்டர் முதலீடுகள் அதிகரித்து, ஆசியாவுக்கான AI மற்றும் கிளவுட் சேவை மையமாக நாடு உருவாகும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. டிரம்பின் அறிவிப்பு அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனங்களின் வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்களை பாதித்தால், இந்தியாவின் அந்த இலக்குக்கும் சவால் ஏற்படலாம்.

ஆனால், வரி எவ்வாறு அமல்படுத்தப்படும், எந்த நிறுவனங்களுக்கு அது பொருந்தும் என்பது குறித்து டிரம்ப் தெளிவான விவரங்களை வெளியிடவில்லை. எனவே, இது தற்போது எச்சரிக்கை மட்டுமே; உறுதியான வரிக் கொள்கையாக அறிவிக்கப்படவில்லை.



தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய்யை தலைமைச் செயலகத்தில், புதிதாகப் பொறுப்பேற்றுக்கொண்ட மாநில தலைமை தகவல் ஆணையர் ச. நடராஜன், (ஓய்வு) மற்றும் மாநில தகவல் ஆணையர்கள் செல்வி எஸ். மகாலட்சுமி, டி.கே. ஷபீர், சி.பி. மீனா, பி. மகாலிங்கம் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய்யை தலைமைச் செயலகத்தில், சிறைச்சாலைகளின் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள உயர்மட்டக் குழுவின் தலைவர் / முன்னாள் காவல்துறை தலைமை இயக்குநர் ஜே.கே.திரிபாதி, (ஓய்வு) மற்றும் குழுவின் உறுப்பினர்கள் – சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை இயக்குநர் கே.சங்கர், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை முன்னாள் துணைத் தலைவர் (ஓய்வு) எஸ். ராஜேந்திரன் ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள்.

திருப்பரங்குன்றத்தில்

போலீஸ் குவிப்பு! தீப வழக்கு மனு

விசாரணைக்கு வரவில்லை!!



மதுரை, நவ. 23–

திருப்பரங்குன்றம் மலை தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்றுவது தொடர்பான உத்தரவுக்கு எதிராக தமிழக அரசு தாக்கல் செய்த சீராய்வு மனு இன்று விசாரணைக்கு வரவில்லை. அந்த உத்தரவைப் பிறப்பித்த நீதிபதிகள் இன்று வழக்குகளை விசாரிக்காததால் மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. இன்றும் நாளையும் மனு விசாரணைக்கு வர வாய்ப்பில்லை எனத் தகவல் வெளியாகியுள்ளது. உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அமர்வு முன்பும் தமிழக அரசு இன்று முறையீடு செய்யவில்லை. இதனால், விவகாரத்தின் அடுத்தகட்ட சட்ட நடவடிக்கை குறித்த எதிர்பார்ப்பு நிலவுகிறது.

கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு, திருப்பரங்குன்றத்தில் பக்தர்களும் இந்து அமைப்பினரும் அதிக அளவில் கூடக்கூடும் என காவல்துறைக்கு தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து, கோயில் பகுதி, மலை, தீபத்தூண் மற்றும் தர்கா அமைந்துள்ள இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. திருப்பரங்குன்றத்தைச் சுற்றியுள்ள முக்கிய இடங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வெளி மாவட்ட போலீஸாரும் வரவழைக்கப்பட உள்ளனர்.

பாதுகாப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, மலைமேல் உள்ள தீபத்தூணில் வெடிகுண்டு தடுப்புப் பிரிவு போலீஸார் திங்கள்கிழமை ஆய்வு மேற்கொண்டனர். மலைக்குச் செல்லும் பழநி ஆண்டவர் கோயில் பாதையில் உள்ள படிக்கட்டுகளில் தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு போலீஸார் இரவு, பகலாக கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். மலைப் பகுதியைச் சுற்றியுள்ள முக்கிய இடங்களில் முகங்களைத் துல்லியமாக அடையாளம் காணும் ஏஐ கேமராக்களும் பொருத்தப்பட்டு வருகின்றன.

இதற்கிடையே, சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் விஜயை அரசு தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண் சந்தித்துப் பேசினார். அதைத் தொடர்ந்து, டிஜிபி மகேஷ்குமார் அகர்வாலும் முதல்வரைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார். திருப்பரங்குன்றம் விவகாரம் உள்ளிட்டவை குறித்து ஆலோசனை நடைபெற்றது.

தீபம் ஏற்றும் பொறுப்பை மாவட்ட ஆட்சியரிடம் ஒப்படைத்துள்ள நீதிமன்றம், கோயில் நிர்வாகம் அங்கீகரிக்கும் குழுவினரே தீபம் ஏற்ற வேண்டும் எனக் கூறியுள்ளதாக கோயில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆட்சியரின் உத்தரவுக்காகக் காத்திருப்பதாகவும் அவர்கள் கூறினர். உச்சிப்பிள்ளையார் கோயில் அருகே வழக்கம்போல் தீபம் ஏற்றுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. தாமிரக் கொப்பரை, நெய் உள்ளிட்ட பொருட்கள் தயார் நிலையில் உள்ளன. மலைத் தீபம் தொடர்பாக மாவட்ட நிர்வாகம் இதுவரை அறிவிப்பு வெளியிடவில்லை.

பறவை காய்ச்சல்: நாமக்கல் முட்டைக்கு ஓமன் நாட்டில் தடை: 5 கோடி முட்டைகள் தேக்கம்!



நாமக்கல், நவ,. 23–

கடலூரில் பறவை காய்ச்சல் பாதிப்பு எதிரொலியாக நாமக்கல் முட்டைக்கு ஓமன் நாட்டில் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால், நாமக்கல்லில் 5 கோடி முட்டைகள் வரையிலும் தேக்கமடைந்துள்ளது. நாமக்கல் மண்டலத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகள் உள்ளன. இங்கு சுமார் 8 கோடி முட்டையின கோழிகள் வளர்க்கப்படுகிறது.

தினமும் சுமார் 7 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழகம், கேரளா மற்றும் தமிழக அரசின் சத்துணவு திட்டம் மற்றும் வெளிநாடுகளுக்கு நாமக்கல்லில் இருந்து முட்டைகள் அனுப்பி வைக்கப்படுகிறது. இந்தியாவில் இருந்து ஓமன், துபாய், மஸ்கட் உள்ளிட்ட நாடுகளுக்கு முட்டை ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஓமன் அரசு, தனது நாட்டு தேவைக்கு 50 சதவீத முட்டைகளை நாமக்கல்லில் இருந்து இறக்குமதி செய்கிறது. கடலூர் மாவட்டத்தில் கடந்த வாரம், கோழிகளுக்கு பறவை காய்ச்சல் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து, அங்குள்ள பண்ணைகளில் இறந்த கோழிகள் பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்தப்பட்டன.

தமிழகத்தில் பறவை காய்ச்சல் இருப்பது உறுதி செய்யப்பட்டதால், இந்தியாவில் இருந்து முட்டை இறக்குமதி செய்ய, ஓமன் அரசாங்கம் தற்போது தடை விதித்துள்ளது. இதனால், நாமக்கல் மண்டலத்தில் சுமார் 5 கோடி முட்டைகள் வரை தேக்கமடைந்துள்ளது. முட்டை தேக்கத்தை தடுக்க பண்ணையாளர்கள் விலை குறைப்பு நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

தங்கம் திடீர் பாய்ச்சல்: ஒரே நாளில் ரூ.2,270 உயர்வு!



புதுடெல்லி, நவ. 23–

இரு வார சரிவுக்குப் பிறகு சர்வதேச சந்தையில் தங்கம், வெள்ளி விலைகள் மீண்டுள்ளன. கடந்த வாரம் தங்கம் 9% சரிந்து 14 மாதக் குறைந்தபட்சத்தைத் தொட்ட நிலையில், தற்போது அவுன்ஸுக்கு 93 டாலர் உயர்ந்து 3,607 டாலராகவும், வெள்ளி 2.59% உயர்ந்து 42.26 டாலராகவும் வர்த்தகமானது. தங்கத்தின் இந்த மீட்சி, அமெரிக்க வட்டி விகித உயர்வு குறித்த எதிர்பார்ப்பு தணிந்ததுடன் தொடர்புபடுத்தப்படுகிறது.

இந்திய MCX சந்தையில் 24 காரட் தங்கம் 10 கிராமுக்கு ரூ.2,270 உயர்ந்து ரூ.1,24,179–க்கும், வெள்ளி கிலோ ரூ.1,51,041–க்கும் வர்த்தகமானது. தொழில்நுட்ப ரீதியில் தங்கம் அதிகம் விற்கப்பட்ட நிலையை எட்டியுள்ளதால் வாங்குதல் அதிகரிக்கலாம் என நிபுணர்கள் கணிக்கின்றனர். விலை மீளலாம் என்றாலும், வரலாற்று உச்சத்தைத் தாண்டும் அளவுக்கு உயர்வு இருக்காது என்றும் கூறப்படுகிறது.

சந்தை நிலவரம்: சென்செக்ஸ் 83,523.02 (–0.47%); நிஃப்டி 25,704.50 (–0.37%). தங்கம் ₹11,600/கிராம்; வெள்ளி ₹1,75,000/கிலோ; பெட்ரோல் ₹107.76; டீசல் ₹99.55; LPG ₹957.50; கச்சா எண்ணெய் $89.84; அமெரிக்க டாலர் ₹92.88



தலையங்கம்
மதுரை மணி
திங்கட்கிழமை 23.11.2026
பராபவ தமிழ் வருடம்
கார்த்திகை மாதம் 07-ம் தேதி

இளையோர் குறைகிறார்கள்; முதியோர் நலனில் இன்றே கவனம் தேவை!



தமிழ்நாட்டின் மக்கள் தொகை உயர்வு மந்தமடைந்து வருகிறது. பிறப்பு விகிதம் குறைவதும், சராசரி ஆயுட்காலம் அதிகரிப்பதும் சமூகத்தின் வயது அமைப்பை மாற்றுகின்றன. கணிப்புகளின்படி, 2036–ல் தமிழக மக்கள்தொகை சுமார் 7.8 கோடியாக இருக்கும்; அதில் 60 வயதைக் கடந்தவர்கள் 20.8 சதவீதமாக உயரக்கூடும். இந்தியாவில் முதியோர் விகிதம் அதிகமுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது வெறும் மக்கள் தொகைக் கணக்கு அல்ல; எதிர்கால மருத்துவம், ஓய்வூதியம், வேலைவாய்ப்பு, குடும்பப் பராமரிப்பு ஆகிய அனைத்தையும் தொடும் மாற்றம். உழைக்கும் வயதினரின் எண்ணிக்கை குறைந்தால், உற்பத்தி மற்றும் வரி வருவாயிலும் அழுத்தம் ஏற்படலாம். அதே நேரத்தில், தனியாக வாழும் முதியோர், நீண்டகால நோயாளிகள், பராமரிப்பாளர் ஆதரவு தேவைப்படுவோர் அதிகரிக்கலாம்.

பிறப்புவிகிதத்தை உயர்த்துவது குறித்து விவாதிக்கும்போது, குடும்பங்கள் குழந்தை பெறுவதற்கான முடிவை மதிப்பதும் அவசியம். குழந்தைப் பராமரிப்பு மையங்கள், மகப்பேறு மற்றும் தந்தை விடுப்பு, வேலைகுடும்பச் சமநிலை, கல்விச் செலவுக்கான ஆதரவு ஆகியவை இளம் குடும்பங்களுக்கு துணையாக இருக்கும். இவற்றுடன், முதியோருக்கான முதன்மை சுகாதாரச் சேவை, வீட்டிலேயே பராமரிப்பு, மனநல ஆலோசனை, பாதுகாப்பான பொதுப் போக்குவரத்து, சமூகத் துணை ஆகியவற்றையும் விரிவுபடுத்த வேண்டும்.

அனுபவம் மிக்க முதியோரைச் சுமையாகப் பார்க்காமல், சமூகத்தின் பங்களிப்பாளர்களாக மதிக்க வேண்டும். அவர்களின் அறிவையும் திறனையும் பயன்படுத்தும் வாய்ப்புகளை உருவாக்குவது அவசியம். இளைய தலைமுறையின் தேவைகளையும் முதியோரின் உரிமைகளையும் இணைக்கும் நீண்டகால மக்கள் நலத் திட்டமே தமிழ்நாட்டின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு அடித்தளமாக அமையும்.

ஆசிரியர்: மதுரை மணி

RAC முறைக்கு முடிவா? ரயில்வே பரிசீலனை!



ரயில்களில் இருவர் ஒரு படுக்கையைப் பகிர்ந்து பயணிக்கும் RAC முறையை ரத்து செய்வது குறித்து இந்திய ரயில்வே பரிசீலித்து வருகிறது. இந்த முறையில் பயணிக்க அனுமதி கிடைத்தாலும், முழு கட்டணம் செலுத்தி படுக்கையைப் பகிர்வது பயணிகளுக்கு சிரமம் எனப் புகார்கள் எழுந்துள்ளன.

உறுதி செய்யப்பட்ட பயணி வராவிட்டால் காலியான படுக்கையை அடுத்த நிலையிலிருந்து மற்றவருக்கு ஒதுக்க டிஜிட்டல் கண்காணிப்பு உதவுவதால், RAC முறையின் தேவை குறைந்துள்ளதாக ரயில்வே அதிகாரிகள் கருதுகின்றனர். RAC பயணிகளுக்கு முழுப் படுக்கை கிடைக்காவிட்டால் பகுதி கட்டணத்தைத் திருப்பித் தர நாடாளுமன்றக் குழுவும் பரிந்துரைத்துள்ளது. RAC முறையை ரத்து செய்வது குறித்து இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

டிசம்பர் 13-ம் தேதி ஆட்டோ ஓட்டுனர்கள் போராட்டம் அறிவிப்பு!



சென்னை, நவ. 23– ‘அரசாணை 319–ஐ ரத்து செய்ய வலியுறுத்தி டிசம்பர் 13–ம் தேதி, சென்னை எழும்பூரில் ஒரு லட்சம் ஆட்டோ ஓட்டுனர்கள் பங்கேற்கும் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்’ என அனைத்து ஆட்டோ தொழிற்சங்க கூட்டமைப்பு அறிவித்துள்ளது. இது தொடர்பாக அதன் ஒருங்கிணைப்பாளர் பாலசுப்பிரமணியம் சென்னையில் அளித்த பேட்டி:

கடந்த 2023–ல் அரசாணை 319 வெளியிடப்பட்டது. அதன்படி நிறுவன வாகனங்களுக்கு, எண்ணிக்கை கட்டுப்பாடின்றி ‘பர்மிட்’ பெற வழி வகை செய்யப்பட்டது. இதை பயன்படுத்தி தனியார் ஆட்டோ நிறுவனங்கள் ஒரே நேரத்தில் 500க்கும் மேற்பட்ட ஆட்டோக்களை பதிவு செய்து இயக்குகின்றன. முறையான பர்மிட், லைசென்ஸ் உள்ளிட்ட ஆவணங்கள் இல்லாமல் வடமாநில ஓட்டுனர்களை பணியில் அமர்த்துகின்றன. இதனால் சொந்தமாக ஆட்டோ வாங்கி ஓட்டி, குடும்பத்தை நடத்தி வரும் சாதாரண ஆட்டோ ஓட்டுனர்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்படுகிறது. எனவே ஆட்டோ ஓட்டுனர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க, அரசாணை 319ஐ உடனடியாக ரத்து செய்ய வேண்டும். இதை வலியுறுத்தி டிசம்பர் 13–ம் தேதி, எழும்பூர் ராஜரத்தினம் அரங்கம் முன், ஆட்டோ ஓட்டுனர்கள் ஒரு லட்சம் பேர் பங்கேற்று, ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

வீடுகளில் சூரிய மின் உற்பத்தி: 5 வகைக் கட்டணங்களுக்கு விலக்கு!



புதுடெல்லி, நவ. 23– வீடுகளில் மேற்கூரை சூரியசக்தி மின் உற்பத்தி நிலையம் அமைப்பதை ஊக்குவிக்கும் வகையில், விண்ணப்பக் கட்டணம், இருவழி மின்மீட்டர் கட்டணம், மின் இணைப்புக் கட்டணம் உள்ளிட்ட பல்வேறு கட்டணங்களில் இருந்து விலக்கு அளிக்க தமிழ்நாடு மின் வாரியம் திட்டமிட்டுள்ளது.

வீடுகளில் மத்திய அரசின் பிரதமர் சூரிய வீடு இலவச மின்சாரத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் வீடுகளின் மேற்கூரையில் சூரியசக்தி மின் உற்பத்தி நிலையம் அமைக்க மத்திய அரசு மானியம் வழங்குகிறது. அதன்படி, 1 கிலோவாட் திறனுள்ள சூரிய சக்தி மின் நிலையத்துக்கு ரூ.30,000, 2 கிலோ வாட்டுக்கு ரூ.60,000, 3 கிலோவாட் மற்றும் அதற்கு மேற்பட்ட திறனுக்கு அதிகபட்சமாக ரூ.78,000 வரை மத்திய அரசின் மானியம் வழங்கப்படுகிறது.

இதனுடன் தமிழக அரசும் கூடுதல் மானியம் வழங்கும் திட்டத்தை அண்மையில் தொடங்கியுள்ளது. இதன் மூலம் 3 கிலோவாட் திறனுள்ள மேற்கூரை சூரிய சக்தி மின்நிலையம் அமைக்கும் குடும்பங்களுக்கு மத்திய–மாநில அரசுகளின் மானியங்கள் சேர்த்து மொத்தம் ரூ.1 லட்சம் வரை கிடைக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மார்ச் மாதத்துக்குள் ஒரு லட்சம் வீடுகளில் மேற்கூரை சூரிய சக்தி மின்நிலையங்களை அமைக்க மின்வாரியம் இலக்கு நிர்ணயித்துள்ளது. இதற்காக இதுவரை சுமார் 35,000 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

கட்டண சுமையைக் குறைக்க நடவடிக்கை: மேற்கூரை சூரியசக்தி மின் நிலையம் அமைப்பதற்கான ஆரம்பகட்ட செலவுகளைக் குறைக்கும் வகையில், 5 வகையான கட்டணங்களுக்கு விலக்கு அளிக்க மின்வாரியம் முடிவு செய்துள்ளது. அதன்படி, சூரியசக்தி மின் நிலையம் அமைப்பதற்கான விண்ணப்பக் கட்டணம், இருவழி மின் மீட்டர் பொருத்துவதற்கான கட்டணம், புதிய மின் இணைப்புக் கட்டணம், ஏற்கனவே உள்ள ஒரு முனை மின்இணைப்பை மும்முனை இணைப்பாக மாற்றுவதற்கான கட்டணம், மின்சுமையை 10 கிலோவாட் வரை உயர்த்துவதற்கான கட்டணம் ஆகியவற்றில் இருந்து விலக்கு அளிக்கப்பட உள்ளது. இதற்காக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் மின் வாரியம் அனுமதி கோரியுள்ளது. ஆணையத்தின் ஒப்புதல் கிடைத்தவுடன் கட்டண விலக்குகளை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

மானிய விவரம்

சூரிய மின் நிலையத் திறன் மத்திய அரசு மானியம் தமிழக அரசு கூடுதல் மானியம் மொத்தம்

1 கிலோவாட் ரூ.30,000 ரூ.5,000 ரூ.35,000

2 கிலோவாட் ரூ.60,000 ரூ.10,000 ரூ.70,000

3 கிலோவாட் ரூ.78,000 ரூ.22,000 ரூ.1லட்சம்

பிரதமர் சூரிய வீடு திட்டத்தின் தேசிய இணையதளத்தில் பதிவு செய்து, அதன் பிறகு தமிழ்நாடு மின் வாரியத்தின் ஒருங்கிணைந்த சூரியசக்தி இணையதளம் மூலம் விண்ணப்ப நடைமுறைகளை மேற்கொள்ளலாம்.

மத்திய அரசின் இணையதளம்: PM Surya Ghar https://pmsuryaghar. gov. in

தமிழக மின் வாரிய இணையதளம்: https://www.tnebitd. gov.in

சூரியசக்தி மின் நிலையம் அமைத்த பிறகு, இருவழி மின்மீட்டர் மூலம் மின் பயன்பாடு மற்றும் மின் உற்பத்தி கணக்கிடப்படும். வீடுகளில் உற்பத்தியாகும் மின்சாரத்தைப் பயன்படுத்தியதுபோக எஞ்சிய மின்சாரத்தை மின் தொகுப்புக்கு அனுப்பும் வசதியும் உள்ளது. வீடுகளில் அமைக்கப்படும் மின்வலையமைப்புடன் இணைக்கப்பட்ட மேற்கூரை சூரியசக்தி மின் நிலையங்கள் சுமார் 25 ஆண்டுகள் வரை செயல்படும் வகையில் வடிவமைக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் தொடரும் மத்திய அரசின் வருவாய் புலனாய்வுத்துறை அதிரடி!



சென்னை, நவ. 23– நாட்டின் எதிர்கால தூண்களான இளைஞர்கள் போதைப்பொருள் என்ற அரக்கனின் பிடியில் சிக்கி தவிக்கிறார்கள். போதைப்பொருள் ஒழிப்புக்கு போலீசார் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வந்தாலும் போதைப்பொருள் விற்பனை மாணவர்கள்– இளைஞர்களை குறிவைத்து ரகசியமாக நடக்கிறது.

இதனால் கல்லூரி மாணவர்கள் தங்கும் விடுதிகளில் அவ்வப்போது போலீசார் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறார்கள். வடமாநிலங்களில் இருந்து ரெயில் மூலம் கடத்தி வரப்படும் போதைப்பொருட்களை பறிமுதல் செய்து கைது நடவடிக்கையை எடுத்து வருகிறார்கள்.

கடந்த 19–ம் தேதி மத்திய அரசின் வருவாய் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் சென்னை மாதவரத்தில் நடத்திய சோதனையில் ரூ.700 கோடி ‘ஹெராயின்’ போதைப் பொருள் சிக்கியது. ஐஸ்வண்டி மூலம் இந்த போதைப்பொருளை கடத்திய 2 பேர் அதிரடியாக கைது செய்யப்பட்டனர். கைப்பற்றப்பட்ட ஹெராயினை இலங்கைக்கு கடல் வழியாக கடத்தி செல்ல கடத்தல்காரர்கள் திட்டமிட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இதுபற்றிய முழு விவரமும் கிடைத்த பிறகு அறிக்கையாக வெளியிடப்படும் என்று வருவாய் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த நிலையில் ராமநாதபுரம் தொண்டியில் இருந்து திருச்சி வழியாக சென்னைக்கு தங்கம் கடத்திச் செல்லப்படுவதாக மத்திய வருவாய் புலனாய்வு பிரிவு அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில் புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் சுங்கச்சாவடி அருகே அதிகாரிகள் முகாமிட்டு கண்காணித்தனர். அப்போது அங்கு வந்து கொண்டிருந்த ஒரு காரை அதிகாரிகள் மடக்கி சோதனை செய்தனர். அந்த வண்டியில் 1.75 கிலோ தங்கத்தை கட்டிகளாக பதுக்கி வைக்கப்பட்டிருந்ததை அதிகாரிகள் கண்டறிந்தனர்.

இதனையடுத்து தங்கத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இதன் மதிப்பு ரூ.1 கோடி இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர். காரை ஓட்டி வந்த சையது நபிகானை அதிரடியாக கைது செய்தனர். விசாரணையில் அவர் தொண்டியைச் சேர்ந்தவர் என்று தெரிய வந்தது. தொடர்ந்து அவரிடம் விசாரணை நடந்து வருகிறது.

தமிழ்நாட்டில் கடந்த ஒரு மாதத்தில் மத்திய வருவாய் புலனாய்வு அதிகாரிகள் மேற்கொண்ட 5–வது முக்கிய சோதனை இதுவாகும்; இதற்கு முன்பு மெத்தம்பெட்டமைன், ஹெராயின் மற்றும் செம்மரக் கட்டைகள் பறிமுதல் செய்யப்பட்ட நிலையில் தற்போது கடத்தல் தங்கம் சிக்கியுள்ளது. கடந்த ஒரு மாதத்தில் மட்டும் கடத்தல் தொடர்புடைய ரூ. 258 கோடி மதிப்பிலான போதை பொருட்கள், தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. மேலும் தமிழ்நாட்டில் கடத்தல் நடவடிக்கைகளுக்கு எதிரான செயல்பாடுகளை மத்திய வருவாய் புலனாய்வு தீவிரப்படுத்தியுள்ளது.

நடப்பு நிதி ஆண்டில் தமிழ்நாடு மின்சார வினியோக கழகம் ரூ.4,060 கோடி லாபம் ஈட்டியுள்ளது - வாரிய அதிகாரிகள் தகவல்!



சென்னை, நவ. 23– தமிழ்நாடு மின்சார வினியோக கழகம் நடப்பு நிதி ஆண்டில் ரூ.4 ஆயிரத்து 60 கோடி லாபம் ஈட்டியுள்ளது என்று வாரிய அதிகாரிகள் கூறினர்.

அதிகரித்து வரும் நிதிச்சுமைகளால் தவித்து வரும் தமிழ்நாடு மின்சார வினியோகக் கழகம் (டி.என்.பி.டி.சி.எல்) நடப்பு 2025–2026 நிதியாண்டில் ரூ.4 ஆயிரத்து 60 கோடி லாபம் ஈட்டியுள்ளது. இது, முந்தைய நிதியாண்டில் ஈட்டிய ரூ.2 ஆயிரத்து 73 கோடி லாபத்தை விட கிட்டத்தட்ட இருமடங்கு ஆகும்.

கடந்த மார்ச் 31–ந்தேதி நிலவரப்படி, அதன் மொத்தக் கடன்கள் ரூ.1.07 லட்சம் கோடியைத் தாண்டியுள்ளது. நிறுவனத்தின் 2025–2026–ம் ஆண்டுக்கான 17–வது ஆண்டு அறிக்கையின் படி, மொத்தக் கடன்கள் ரூ.1 லட்சத்து 7 ஆயிரத்து 523 கோடியாக இருந்தது. இதில் ரூ.77 ஆயிரத்து 565 கோடி நீண்ட காலக் கடன்களாகும். இது முந்தைய நிதியாண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூ. 1 லட்சத்து 1,782 கோடியை விட அதிகமாகும்.

நிறுவனத்தின் நிதிச் செலவுகளும் 2024–2025 நிதியாண்டில் ரூ.10 ஆயிரத்து 517 கோடியில் இருந்து 2025–2026 நிதியாண்டில் ரூ.12 ஆயிரத்து 770 கோடியாக. 21.4 சதவீதம் கணிசமாக உயர்ந்துள்ளது. கடன் சுமை இருப்பினும், லாபத்தில் ஏற்பட்ட முன்னேற்றம். நிறுவனத்தின் பெரும் கடன் சுமையைக் குறைக்க பெரிதாக உதவவில்லை. கோடைக்கால மின்சார பற்றாக்குறையை சமாளிக்க, டி.என். பி.டி.சி.எல் பலமுனை கொள்முதல் நடவடிக்கைகளை திட்டமிட்டுள்ளது.

நிறுவனத்தின் மொத்த வருமானம் 2024–2025–ம் ஆண்டில் ரூ.1,00.417 கோடியாக இருந்த நிலையில், தற்போது ரூ.1,02,037 கோடியாக உள்ளது. இதில், வருமானத்தின் கிட்டத்தட்ட 32 சதவீதம் அரசாங்க உதவியில் (மானியங்கள் மற்றும் நிதியுதவிகள்) கிடைக்கிறது. மின்சாரக் கொள்முதல் மிகப்பெரிய செலவினமாகத் தொடர்ந்த போதிலும், அதன் செலவு ரூ.75 ஆயிரத்து 960 கோடியிலிருந்து ரூ.72 ஆயிரத்து 348 கோடியாகக் குறைந்தது.

ஊழியர் நலச் செலவுகள் ரூ.8 ஆயிரத்து 976 கோடியில் இருந்து ரூ.9 ஆயிரத்து 587 கோடியாக அதிகரித்த நிலையில், தேய்மானம் மற்றும் மதிப்பிழப்பு செலவுகள் ரூ.2 ஆயிரத்து 256 கோடியாக இருந்தன. நிதிச் செலவுகள் அதிகரித்த போதிலும், மின்சாரக் கொள்முதல் செலவுகள் ரூ.2 ஆயிரத்து 256 கோடியாக இருந்தன. நிதிச் செலவுகள் அதிகரித்த போதிலும், மின்சாரக் கொள்முதல் செலவினம் குறைக்கப்பட்டதால் நிறுவனத்தின் லாபத்தன்மை மேம்பட்டது.

மொத்தச் செலவுகள் ரூ.98 ஆயிரத்து 344 கோடியில் இருந்து ரூ.97 ஆயிரத்து 977 கோடியாகச் சிறிதளவு குறைந்தது. தமிழ்நாடு மின் வினியோக கழகத்தின் தணிக்கை அறிக்கையில் கண்டறியப்பட்டுள்ள முரண்பாடுகளால், அதன் நிகர லாபத்தில் ரூ.3,744,39 கோடி வரை குறைவதற்கோ அல்லது இழப்பு ஏற்படுவதற்கோ வாய்ப்புள்ளதாக தணிக்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தணிக்கையாளர்கள் கணக்குகளை ஆய்வு செய்தபோது, பயன்படுத்தப்படாத உதிரிபாகங்கள், நுகர்வோரிடம் இருந்து வர வேண்டிய நிலுவை தொகைக்கான இழப்பீட்டு நிதி ஒதுக்காதது. திட்டப்பணிகளில் ஏற்பட்ட குளறுபடிகள் மற்றும் இரட்டை வருவாய் வரவுகள் போன்ற பல்வேறு கணக்கியல் முரண்பாடுகளைக் கண்டறிந்தனர். இந்த முரண்பாடுகளைச் சரிசெய்யும்போது. தற்போதைய லாப மதிப்பில் இருந்து ரூ.3,744.39 கோடி குறையக்கூடும் எனத் தணிக்கையாளர்கள் எச்சரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த தணிக்கை முரண்பாடுகள் குறித்து மின் வாரிய அதிகாரிகள் தரப்பில் தணிக்கையாளர்களுடன் இணைந்து கணக்குகளைச் சரிபார்க்கும் பணிகள் நடந்து வருகின்றன. நிகர லாபம் இந்த அளவுக்கு பெருமளவில் குறையாமல் இருக்கத் தேவையான ஆவணங்களை சமர்ப்பித்து வருகிறோம் என்று வாரிய அதிகாரிகள் கூறினர்.



கார்த்திகையில் கல்யாண யோகம்! 5 ராசிகளுக்கு நல்ல வரன்?



2026–ம் ஆண்டு கார்த்திகை மாதம் திருமண முயற்சிகளில் இருப்பவர்களுக்கு சாதகமான காலமாக அமையலாம் என ஜோதிடக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. இந்த மாதத்தில் குரு, சுக்கிரன், புதன் ஆகிய கிரகங்களின் அமைப்பு திருமணம், காதல் உறவு மற்றும் குடும்ப வாழ்வில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும் எனக் கூறப்படுகிறது. குறிப்பாக மேஷம், மிதுனம், கடகம், துலாம், கும்பம் ஆகிய ஐந்து ராசிக்காரர்களுக்கு திருமணம் தொடர்பான முயற்சிகளில் முன்னேற்றம் கிடைக்க வாய்ப்புள்ளதாக ஜோதிடர்கள் கணித்துள்ளனர்.

மேஷம்: திருமண வயதில் இருப்பவர்களுக்கு குடும்பத்தினர் மூலம் நல்ல வரன் அமையலாம். காதல் உறவில் இருப்பவர்கள் தங்கள் உறவை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்லும் முயற்சியில் முன்னேற்றம் காணலாம். திருமணமானவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சியும் புரிதலும் அதிகரிக்கலாம்.

மிதுனம்: சுக்கிரன், புதன் இணைவு திருமண முயற்சிகளுக்குச் சாதகமான சூழலை உருவாக்கும் எனக் கூறப்படுகிறது. குடும்பத்தில் நல்ல செய்திகள் கிடைக்கலாம். காதல் உறவில் இருப்பவர்கள் திருமணம் குறித்து பேசுவதற்கும், குடும்பத்தினரின் ஆதரவைப் பெறுவதற்கும் வாய்ப்பு உண்டு.

கடகம்: திருமணப் பேச்சுகள் எதிர்பார்த்தபடி முன்னேறலாம். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான வாய்ப்பும் உள்ளது. காதல் வாழ்க்கையில் புரிதலும் இணக்கமும் அதிகரிக்கலாம்.

துலாம்: திருமணம் தொடர்பாக எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலனைத் தரலாம். திருமணமான தம்பதிகளிடையே மகிழ்ச்சியும் நெருக்கமும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகக் கணிக்கப்படுகிறது. வேலைவாய்ப்பிலும் புதிய முன்னேற்றங்கள் கிடைக்கலாம்.

கும்பம்: திருமண முயற்சிகள் வேகம் பெறலாம். சிலருக்கு எதிர்பாராத வகையில் திருமணப் பேச்சு தொடங்கலாம் என்றும், காதல் திருமணத்தை நோக்கிய முயற்சிகள் முன்னேறலாம் என்றும் கூறப்படுகிறது. குடும்ப வாழ்க்கையில் நிலவி வந்த கருத்து வேறுபாடுகள் குறைய வாய்ப்புள்ளது.

ஜோதிடப் பலன்கள் பொதுவான கணிப்புகள் மட்டுமே. தனிப்பட்ட ஜாதக அமைப்பைப் பொறுத்து பலன்கள் மாறுபடலாம்.

ஜார்கண்ட் முன்னாள் முதல்வர் அர்ஜுன் முண்டாவின் தாயார் காலமானார்!



ஜார்கண்ட், நவ. 23– உடல்நலக் குறைவால் ஜார்கண்ட் மாநில முன்னாள் முதல்வர் அர்ஜுன் முண்டாவின் தாயார் சாய்ரா முண்டா காலமானார். வயது மூப்பு காரணமாக ஏற்பட்ட உடல்நலக் குறைவால், சாய்ரா முண்டா சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்பு ஜாம்ஷெட்பூரில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அங்கு சிகிச்சை பெற்று வந்த அவர், திங்கள்கிழமை அதிகாலை 1 மணியளவில் காலமானதாக அர்ஜுன் முண்டாவின் குடும்ப உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

தாயாரின் மறைவு குறித்து முன்னாள் முதல்வர் அர்ஜுன் முண்டா தனது சமூக வலைதளப் பக்கத்தில், “அம்மா இனி இந்த உலகில் இல்லை. உங்களின் மறைவு ஒரு தாயின் அன்பான நிழலைப் பறித்தது மட்டுமல்லாமல், வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த மிக வலிமையான ஆதரவையும் பறித்துவிட்டது. உங்களின் இருப்பு ஒவ்வொரு கஷ்டத்தையும் சிறியதாகத் தோன்றச் செய்ததுடன், ஒவ்வொரு வலியையும் லேசாக்கியது,” என்று குறிப்பிட்டுள்ளார். இதனிடையே சாய்ரா முண்டாவின் மறைவுக்கு ஜார்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

மேலும், முன்னாள் மத்திய அமைச்சரான அர்ஜுன் முண்டாவின் தாயார் மறைவுக்கு ஜார்கண்ட் முன்னாள் முதல்வர் ரகுபர் தாஸும் இரங்கல் தெரிவித்துள்ளார்.

யு.பி.ஐ. மூலம் பணம் பெறும் முறைக்கு டாஸ்மாக் ஊழியர்கள் எதிர்ப்பு!



சென்னை, நவ. 23– ‘டாஸ்மாக்’ மதுக்கடைகளில் விற்பனை விலையை விட பாட்டிலுக்கு கூடுதலாக 10 ரூபாய் வசூலிப்பதற்கு முற்றுப்புள்ளி வைக்க, ‘டிஜிட்டல்’ பணப்பரிவர்த்தனையை படிப்படியாக முழுமையாக அமல்படுத்த த.வெ.க. அரசு திட்டமிட்டுள்ளது.

அதன்படி முதல்கட்டமாக சென்னை வடக்கு, தெற்கு, மத்தியம் மற்றும் திருவள்ளூர் கிழக்கு மாவட்டங்களில் ரூ.1,000–க்கு மேல் மதுபானங்கள் வாங்குவோரிடம் ரொக்கமாகப் பணம் பெறாமல், பி.ஓ.எஸ். டிவைஸ் கருவியைப் பயன்படுத்தி ‘டெபிட்’, ‘கிரெடிட்’ கார்டு அல்லது யு.பி.ஐ. ‘ஸ்கேன்’ மூலம் பணம் பெற இன்று (திங்கட்கிழமை) முதல் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதற்கு டாஸ்மாக் ஊழியர்கள் தரப்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. பி.ஓ.எஸ். கருவிகளில் ஏற்கனவே நிலவி வரும் 8 வகையான தொழில்நுட்பக் குளறுபடிகளுக்கு முதலில் தீர்வு கண்டு, பணியாளர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்த பிறகே புதிய நடைமுறையை அமல்படுத்த வேண்டும் என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



பச்சிளம் குழந்தை பராமரிப்பு: பெற்றோர் தவிர்க்க வேண்டிய 5 தவறுகள்!



பிறந்த முதல் 28 நாட்கள் குழந்தையின் உடல்நலத்தில் மிகுந்த கவனம் தேவைப்படும் காலம். இந்த நாட்களில் பெற்றோர் தவிர்க்க வேண்டிய முக்கியத் தவறுகள் குறித்து குழந்தைகள் நல மருத்துவர் அறிவுறுத்தியுள்ளார்.

பசி அறிகுறிகளைப் புறக்கணித்தல்: அழும் வரை காத்திருக்காமல், குழந்தை கைகளை வாயில் வைப்பது, பால் தேடித் தலையைத் திருப்புவது போன்ற அறிகுறிகளைக் கவனித்து உணவளிக்க வேண்டும். முதல் ஆறு மாதங்களுக்கு தாய்ப்பால் மட்டுமே போதுமானது; தண்ணீர் உள்ளிட்டவற்றை மருத்துவர் ஆலோசனையின்றிக் கொடுக்க வேண்டாம்.

அதிக ஆடைகளை அணிவித்தல்: குழந்தையின் மார்பு அல்லது முதுகைத் தொட்டு உடல் சூட்டைச் சரிபார்த்து, அறையின் வெப்பநிலைக்கு ஏற்ற ஆடைகளை அணிவிக்க வேண்டும்.

பாதுகாப்பற்ற தூக்கம்: குழந்தையை மல்லாக்க, உறுதியான சமமான படுக்கையில் படுக்க வைக்க வேண்டும். தலையணை, தளர்வான போர்வை, மென்மையான பொம்மைகளைப் படுக்கையில் வைக்கக் கூடாது.

வீட்டு வைத்தியங்களைப் பயன்படுத்துதல்: கண்களில் மை இடுவது, தோலில் பவுடர் பூசுவது, மூக்கு அல்லது காதில் எண்ணெய் விடுவது போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். குழந்தையைத் தொடுவதற்கு முன் கைகளைச் சுத்தமாகக் கழுவ வேண்டும்.

எச்சரிக்கை அறிகுறிகளை அலட்சியப்படுத்துதல்: பால் குடிக்க மறுத்தல், மூச்சுத் திணறல், அதிகச் சோர்வு, காய்ச்சல் அல்லது மஞ்சள் நிறம் தென்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும்.

குழந்தையின் உடல்நிலை குறித்து சந்தேகம் ஏற்பட்டால் சுய வைத்தியம் செய்யாமல், குழந்தைகள் நல மருத்துவரிடம் ஆலோசனை பெறுவது அவசியம்.

சினிமா துளிகள்..!

3 ஆண்டு உழைப்பு.. 'ராமாயணா' படத்திற்காக 12 படங்களை கைவிட்டேன் - ஏ.ஆர். ரகுமான்!



'ராமாயணா' படத்திற்கு இசையமைக்க இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமான் மூன்று ஆண்டுகள் செலவிட்டதாகத் தெரிவித்தார். நிதேஷ் திவாரி இயக்கத்தில் ரன்பீர் கபூர் நடித்துள்ள 'ராமாயணா' படத்திற்கு ஜெர்மானிய இசையமைப்பாளர் ஹான்ஸ் ஜிம்மருடன் இணைந்து ரகுமான் இசையமைத்துள்ளார். இந்தியாவில் இப்படத்தின் மொத்த வசூல் ரூ. 1,126 கோடியை எட்டியுள்ளது.

இந்நிலையில் நேற்று கோவாவில் இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் இப்படத்திற்கு இசையமைத்தமை குறித்து ரகுமான் மனம் திறந்து பேசியுள்ளார். அவர் கூறியதாவது, "நாங்கள் ராமாயணாவின் இசை, கருப்பொருள் மற்றும் பிற அம்சங்களில் மூன்று ஆண்டுகளாகப் பணியாற்றி வந்தோம்.

சில மெட்டுக்களை இறுதி செய்வதற்கு முன்பு, அவற்றின் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட வடிவங்கள் தயாரிக்கப்பட்டன.

அந்த செயல்முறை அற்புதமாக இருந்தது. 'ராமாயணத்தில்' முழுமையாக மூழ்கிவிட வேண்டும் என்பதற்காக, நான் சுமார் 10–12 படங்களைக் கைவிட்டேன். பல பெரிய மற்றும் முக்கியமான திரைப்பட இயக்குனர்களின் படங்களையும் நான் கைவிட்டேன், அதற்காக நான் பெருமைப்படுகிறேன்" என்றார். தன்னை ஆக்கப்பூர்வமாக ஈடுபடுத்தும் பணிகளை மட்டுமே ஏற்றுக்கொள்வதாகக் கூறிய அவர், "நான் அதை ரசிக்கிறேன். ஒரு திட்டத்தை நான் உண்மையாக விரும்பி, ரசித்தால் மட்டுமே ஏற்றுக்கொள்வேன். அது எனது கலைப் புரிதலை மேம்படுத்துவதோடு, எனது முழு குழுவிற்கும் புத்துணர்ச்சி அளிக்கிறது" என்றார்.

இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு இசை மரபுகளை ஆராய்வதில் தனக்குள்ள ஆர்வம் குறித்தும் ரகுமான் பேசினார். ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் அதற்கே உரிய தனித்துவமான அடையாளம் உள்ளது என்றும், ஒரு இசைக் கலைஞராக, இந்த மாறுபட்ட பாணிகளை ஒன்றிணைப்பதை விரும்புவதாகவும் அவர் கூறினார்.

மேலும், "நான் பல கலாச்சாரங்களுடன் இணைந்திருக்கிறேன்; நான் பாரம்பரிய இசையில் பணியாற்றும்போதும் அல்லது மற்றவர்களுக்காக பாரம்பரிய மெட்டுக்களை வாசிக்கும்போதும் கூட, நான் நவீன இசையைக் கேட்கிறேன்.

எனவே, எனது சிந்தனையில் நவீனத்துவமும் அடங்கியுள்ளது. நான் இரண்டையும் தனித்தனிப் பிரிவுகளில் வைத்திருக்கிறேன். சில சமயங்களில் நான் குழப்பமடைவது கூடண்டு" என்று கூறினார்.

தமிழகத்தில் 1,461 ஏரிகள் வறண்டன... அணைகளில் 36.40 சதவீதம் மட்டுமே நீர்இருப்பு!

சென்னை, நவ. 23–



தமிழக நீர்வளத்துறை பராமரிப்பில் உள்ள 90 அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்களின் மொத்த கொள்ளளவு 224 டி.எம்.சி. ஆகும். இதில் மேட்டூர், பவானிசாகர் உள்ளிட்ட 15 முக்கிய அணைகளின் கொள்ளளவு மட்டும் 198 டி.எம்.சி. ஆகும். தற்போது, 90 அணைகளிலும் சேர்த்து 81.65 டி.எம்.சி. (36.40 சதவீதம்) நீர் மட்டுமே கையிருப்பில் உள்ளது. அதிகபட்சமாக மேட்டூர் அணையில் 25.84 டி.எம்.சி., பவானிசாகரில் 15.23, பரம்பிக்குளத்தில் 8.80, சாத்தனூர் 4.18, வைகை 2.64, பெரி யாறு 2.57, பேச்சிப்பாறை 2.16, பாபநாசம் 1.95, அமராவதி 1.70, மணிமுத்தாறு 1.65, கிருஷ்ணகிரி அணையில் 1.34 டி.எம்.சி. தண்ணீர் இருப்பு உள்ளது. ஆழியாறு, சோலை யாறு, பெருஞ்சாணி அணைகளில் 1 டி.எம்.சி.க்கும் குறைவாகவே நீர் உள்ளது. மாநிலத்தில் உள்ள 14,141 பாசன ஏரிகளில் 763 ஏரிகள் மட் டுமே முழுமையாக நிரம்பியுள்ளன. இவற்றில் அதிகபட்சமாக கன்னியாகுமரியில் 564 ஏரிகள் நிரம்பியுள்ளன. மீதமுள்ளவற்றில் 908 ஏரிகள் 76 முதல் 99 சதவீதமும், 1,235 ஏரிகள் 51 முதல் 75 சதவீதமும், 2,181 ஏரிகள் 26 முதல் 50 சதவீதமும், 7,593 ஏரிகள் 1 முதல் 25 சதவீதமும் நிரம்பியுள்ளன. அதேநேரம், நெல்லையில் 236, சிவகங்கையில் 139 ஏரிகள் உள்பட மாநிலம் முழுவதும் 1,461 ஏரிகள் நீரின்றி வறண்டு கிடக்கின்றன.

சென்னைக்கு குடிநீர் வழங்கும் பூண்டி, சோழவரம், புழல், கண்ண ன்கோட்டை, செம்பரம்பாக்கம் மற்றும் வீராணம் ஆகிய 6 நீர்நிலைகளிலும் சேர்த்து 5.27 டி.எம்.சி. நீர் மட்டுமே உள்ளது. பூண்டி ஏரிக்கு வரும் கிருஷ்ணா நதி நீரும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இதே காலகட்டத் தில் 10 டி.எம்.சி. நீர் இருந்த நிலையில், தற்போது 50 சதவீதம் நீர் குறைந்துள்ளது.

சென்னை குடிநீர் ஏரிகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் எங்கும் போதிய மழை பதிவாகவில்லை. வடகிழக்குப் பருவமழை போதிய அளவு பெய்யாததால் நீர் சேமிப்பது சவாலாக உள்ளதாகவும், எஞ்சியு ள்ள ஒரு மாதத்தில் மழை பெய்யும் என எதிர்பார்ப்பதாகவும் நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடகிழக்கு பருவமழை தமிழகத்தில் நடப்பாண்டு இதுவரை இயல்பை விட 13 சதவீதம் குறைவாகவே பதிவாகியுள்ளது. குறிப்பாக டெல்டா மற்றும் வட கடலோர மாவட்டங்களில் மழைப்பற்றாக்குறை அதிகமாக உள்ளது. அக்டோபர் 1 முதல் நவம்பர் 19 வரை தமிழகத்தில் இயல்பாக 298.9 மி.மீ மழை பெய்ய வேண்டிய நிலையில், 259.9 மி.மீ மழை மட்டுமே பதிவாகியுள்ளது என்று வானிலை அதிகாரிகள் கூறினர்.

சபரிமலை: பக்தர்களுக்கு எச்சரிக்கை!

சபரிமலை, நவ. 23–



கடினமான மலைப் பாதையில் செல்லும் ஐயப்ப பக்தர்கள் சுகாதா ரத்துறையின் வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் என கேரள அரசு அறிவுறுத்தியுள்ளது. இதய நோய் உள்ளவர்கள் யாத்திரைக்கு முன் மருத்துவப் பரிசோதனை செய்து, மருத்துவரிடம் தகுதிச் சான்று பெற வேண்டும். சமீபத்தில் மாரடைப்பு ஏற்பட்டவர்கள், இதய அறுவைச் சிகிச்சை அல்லது ஆஞ்சியோபிளாஸ்டி செய்தவர்கள், இதய செயலிழப்பு உள்ளவர்கள் சிறப்பு மருத்துவரின் ஆலோசனையின்றி மலையேறக் கூடாது. வாழ்க்கைமுறை நோய்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும், பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளைத் தவறாமல் எடுத்துக்கொண்டு, தேவையான மருந்துகள் மற்றும் மருந்துச் சீட்டையும் உடன் வைத்தி ருக்கவும். உடல் தகுதிக்கு ஏற்ப மெது வாகச் செல்ல வேண்டும்; ஓடுதல், வேக மாக ஏறுதல், கூட்டத்தில் முண்டியடித்தல் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். அடிக்கடி ஓய்வெடுத்து, போதிய தண்ணீர் அருந்தி, வெறும் வயிற்றில் மலையேறக் கூடாது. திரவம் கட்டுப்படு த்தும்படி மருத்துவர் அறிவுறுத்தியவர்கள் அவரது ஆலோசனையைப் பின்பற்ற வேண்டும். நெஞ்சுவலி, மூச்சுத்திணறல், அதிக வியர்வை, கடும் சோர்வு, மயக்கம் அல்லது இதயத் துடிப்பில் மாற்றம் ஏற்பட்டால் உடனே நடப்பதை நிறுத்தி, அருகிலுள்ள மருத்துவ மையத்தின் உதவியை நாட வேண்டும். அவசர மருத்துவ உதவிக்கு 04735 203232 என்ற எண்ணில் அழைக்கலாம்.

நவம்பர் 17–ம் தேதி தொடங்கிய மண்டல யாத்திரைக் காலத்தில், டிசம்பர் 27–ம் தேதி மண்டல பூஜை நடைபெறுகிறது; அன்று தங்க அங்கி அணிவித்து சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படும். கோயில் டிசம்பர் 30–ம் தேதி மகரவிளக்கு பூஜைக்காக மீண்டும் திறக்கப்படும்.

காரில் கடத்தி வரப்பட்ட 200 கிலோ ஹான்ஸ் பறிமுதல்!

ராசிபுரம், நவ. 23–



நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அருகே காரில் கடத்தி வரப்பட்ட சுமார் 200 கிலோ தடை செய்யப்பட்ட ஹான்ஸ் புகையிலைப் பொருட்களை போலீசார் பறிமுதல் செய்து, ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த இருவரைக் கைது செய்தனர்.

மங்களபுரம் காவல் உதவி ஆய்வாளர் சந்தியா தலைமையிலான போலீசார் இன்று காலை 6 மணியளவில் ராசிபுரம் ஆத்தூர் சாலையில் உள்ள கொம்பேத்தங்கள்மேடு பகுதியில் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்த னர். அப்போது ஆத்தூரில் இருந்து மங்களபுரம் நோக்கி வந்த TN 91 V 2172 என்ற பதிவு எண் கொண்ட கிரெட்டா காரை நிறுத்தி போலீசார் சோதனை செய்தனர். அப்போது காரில் அரசால் தடை செய்யப்பட்ட சுமார் 200 கிலோ ஹான்ஸ் புகையிலைப் பொரு ட்கள் கடத்தி வரப்பட்டது தெரியவந்தது.

இதையடுத்து காருடன் ஹான்ஸ் புகையிலைப் பொருட்களையும் பறிமுதல் செய்த போலீசார், காரில் வந்த இருவரையும் கைது செய்தனர்.

விசாரணையில் அவர்கள் ராஜஸ்தான் மாநிலம் ஜலோர் மாவட்டத்தைச் சேர்ந்த சுரேந்திர சிங் (30), நேனா ராமின் மகன் ஹனுமானா ராம் (23) என்பது தெரியவந்தது. இவர்கள் இருவரும் தற்போது கர்நாடக மாநிலம் பெங்களூரு ஜிகினி பகுதியில் மார்க்கெட் அருகே வசித்து வந்துள்ளனர். மேலும், பறிமுதல் செய்யப்பட்ட ஹான்ஸ் புகையிலைப் பொருட்கள் பெங்களூருவில் இருந்து கொண்டு வரப்பட்டதாக போலீசார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றக் காவலுக்கு போலீசார் அனுப்பி வைத்தனர். இதுகுறித்து மங்களபுரம் போலீசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

அதிமுகவை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது: நத்தம் விசுவநாதன் குற்றச்சாட்டு!

பழனி நவம்பர் 23–



அதிமுகவை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது எடப்பாடி பழனிச்சாமி அணுகுமுறையால் என்று பழனியில் முன்னாள் அமைச்சர் நத்தம் விசுவநாதன் குற்றச்சாட்டு கூறினார். பழனிக்கு நேற்று முன்னாள் அதிமுக அமைச்சர் நத்தம் விஸ்வநாதன் வந்திருந்தார். பின்பு அவர் நிருபர்களிடம் கூறியதாவது. மறைந்த முதலமைச்சர் எம்ஜிஆர் மற்றும் ஜெயலலிதா ஆகியோர் திமுக கட்சியுடன் ஒட்டும் உறவு இருக்கக் கூடாது என்ற கொள்கைகளை கடைசி வரை கடைபிடித்து வந்தனர். ஆனால் தற்போதுள்ள அதிமுக பொதுச்செயலா ளரான, எடப்பாடி பழனிச்சாமி மு க ஸ்டாலின் உடன் அமர்ந்து பேசி மகிழ்ந்த புகைப்படத்தை பெருமையாக வெளியிட்டுள்ளார். இதை அதிமுக தொண்டர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். முன்னாள் முதல்வர் ஜெயலலிதா உயிருடன் இருந்திருந்தால், இது போன்ற செயல்களைச் செய்யும் தைரியம் அவருக்கு வந்திருக்குமா, அவருடைய பதவிகளை உடனே பறித்து அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்தும் நீக்கி இருப்பார். எடப்பாடி பழனிச்சாமி நடவடிக்கையால் அவர் திமுகவுடன் கூட்டணி வைத்து கொள்வாரோ என்றசந்தேகம் மக்களிடம் ஏற்பட்டுள்ளது. எடப்பாடி பழனிச்சாமி பொதுச் செயலாளரான பின்பு, எந்த தேர்தலிலும் வெற்றி பெறவில்லை. கட்சி நாளுக்கு நாள் தேய்ந்து கொண்டிருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நானும் செங்கோட்டையன், வேலுமணி, உள்பட ஆறு பேர்களும் எடப்பாடி பழனிச்சாமியை சந்தித்து இனிமேல் யாரையும் கட்சியிலிருந்து நீக்க கூடாது என்று கேட்டுக்கொ ண்டோம்.

ஆனால் எங்களின் கோரிக்கை ஏற்காமல், ஆறு பேரையும் எதிரிகளாக கருதினார். தொடர்ந்து கட்சி நிர்வாகிகளை நீக்கி வருகிறார்.அவர் தனது அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லாவிடில் அதிமுகவை ஆண்டவ னாலும் காப்பாற்ற முடியாது. இவ்வாறு அவர் கூறினார்.

கரூரில் திமுக செயற்குழு கூட்டம்: இடைத்தேர்தல் வெற்றிக்கு ஆலோசனை!

கரூர், நவ. 23–



கரூர் மாவட்ட திமுக செயற்குழு உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம், மாவட்ட அவைத்தலைவர் ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. பங்கேற்று, கரூர் இடைத்தே ர்தலில் திமுகவை அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய கட்சியினர் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து பேசினார்.

உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு நவம்பர் 27–ம் தேதி மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள், அன்னதானம், மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்குதல், விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் என முடிவு செய்யப்பட்டது. நவம்பர் 28, 29–ல் சி.எஸ்.ஐ. விளையாட்டு மைதானத்தில் கபாடி; டிசம்பர் 5, 6–ல் அட்லஸ் மைதானத்தில் கிரிக்கெட்; டிசம்பர் 12, 13–ல் பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

மேகதாது அணை விவகாரத்தில் தமிழகத்தின் காவிரி உரிமை தொடர்பாக அமைதி காப்பதாகவும், பேரவை துணைத்தலைவர் பதவியின் மாண்பைக் குலைத்தவர் மற்றும் கள்ளக்குறிச்சி எம்.எல்.ஏ. விவகாரத்தில் நடவடிக்கை எடுக்காததாகவும், போதைப் பழக்கம், காவல் நிலைய மரணங்கள், பாலியல் குற்றங்களைத் தடுக்கத் தவறியதாகவும் தமிழக அரசைக் கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. எம்.எல்.ஏ.க்கள் இளங்கோ, சந்திரன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

வேலை வாய்ப்பு

SIDBI, NABARD வங்கிகளில் வேலைவாய்ப்பு!



சிட்பி (SIDBI): கிரேடு 'A', 'B' அதிகாரிப் பணிகளில் 68 நிரந்தரக் காலியிடங்கள்.
அறிவிப்பு எண்: 8/Grade 'A' and 'B'/2026–27.
விண்ணப்பக் காலம்: நவம்பர் 21டிசம்பர் 11, 2026.
ஆன்லைனில்: sidbi.in
நபார்டு (NABARD):
ஜூனியர், சீனியர் திட்டப் பணியாளர் பதவிகளில் 24 ஒப்பந்தக் காலியிடங்கள்.
அறிவிப்பு எண்: 05.
விண்ணப்பக் காலம்: நவம்பர் 21டிசம்பர் 7, 2026.
ஆன்லைனில்: nabard.org

காங்கிரஸ் கமிட்டி இயக்க மறு சீரமைப்பு திட்ட நிர்வாகிகள் கூட்டம்!



திருப்பூர், நவ. 23–

திருப்பூர் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் இயக்க மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம் பார்க் சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் மாநகர் மாவட்ட தலைவர் கோபால்சாமி தலைமையில் நடைபெற்றது.இந்த கூட்டத்தில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் அகில இந்திய பொறுப்பாளர் நாயுடு கலந்து கொண்டு நீக்கப்பட்ட வாக்காளர்கள் குறித்து விவர ங்களை சேகரித்து, புதிதாக சேர்க்கப்படுவதற்கு காங்கிரஸ் கட்சி நிர்வாகிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினர். அதனைத்தொடர்ந்து புதிதாக பொறுப்பேற்ற காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகளுக்கு சால்வை அணிவித்து காங்கிரஸ் கட்சியின் சான்றிதழ் வழங்கப்பட்டது.இந்த நிகழ்ச்சியில் கொங்கு மண்டல துணைப் பொறுப்பாளர் கந்தசாமி, மாநகர் மாவட்ட மேலிட பொறுப்பாளர் துரைராஜ், முன்னாள் மாவட்ட தலைவர் கிருஷ்ணன்.மாநில செயலாளர் டிடிகே.சித்திக் மற்றும் மாநில மாநகர் மாவட்ட பகுதி வார்டு நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்....

பழனி முருகன் மலைக் கோவிலில் திருக்கார்த்திகை தீபம்!



பழனி நவம்பர் 23–

பழனி முருகன் மலைக் கோவிலில் நாளை மாலை 6:00 மணிக்கு திருக்கார்த்திகை தீபம் ஏற்றப்படுகிறது. பழனி முருகன் மலைக் கோவிலில் நாளை திருக்கார்த்திகை தீப திருவிழாவை முன்னிட்டு, அதிகாலை 4 மணிக்கு கோவில் நடை திறக்கப்படுகிறது. பின்பு முருகப்பெருமானுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகிறது. அதன் பின்பு விஸ்வரூப தரிசனம் நடைபெறுகிறது. பின்பு மாலை 4 மணிக்கு சாயரட்சை பூஜையும், 4.45 மணிக்கு முருகப்பெருமான் தங்கமயில் வாகனத்தில் உலா வரும் காட்சி நடைபெறுகிறது. பின்பு மலைக்கோவிலில் நான்கு மூலைகளிலும் தீபம் வைக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. அதன் பின்பு மாலை 6 மணிக்கு மலைக்கோயில் தீபஸ்கம்பத்தில் திருக்கார்த்திகை தீபம் ஏற்றும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. பின்பு சொக்கப்பனை கொளுத்தும் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. இதற்கான விழா ஏற்பாடுகளை பழனி கோயில் நிர்வாக அதிகாரி ஹரிஹரன் செய்து வருகிறார்.



இஸ்மாயில் லக்கி டூராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



இன்றைய கார்ட்டூன்



புத்தக கொள்முதல் முறைகேட்டில் மேலும் 2 பதிப்பகங்களுக்கு தொடர்பு: லஞ்ச ஒழிப்புத்துறை தகவல்!

சென்னை, நவ. 23–

நூலகங்களுக்கு புத்தகங்கள் கொள்முதல் செய்ததில் கடந்த மூன்று ஆண்டுகளாக முறைகேடு நடந்துள்ளதாகவும், இந்த முறைகேட்டில் மேலும் இரண்டு பதிப்பகங்களுக்கு தொடர்புள்ளது கண்டறியப்பட்டுள்ளதாக, லஞ்ச ஒழிப்புத்துறை சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

கோவை பெரியார் அறிவுலகத்துக்கு புத்தங்கள் கொள்முதல் செய்ததில் முறைகேடு நடந்துள்ளதாகக் கூறி, லஞ்ச ஒழிப்புத்துறை வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும் என திமுக சட்டப்பிரிவு இணைச் செயலாளர் இ.பரந்தாமன் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், அகல் விளக்கு மற்றும் ஃபீனிக்ஸ் பதிப்பகங்களில் இருந்து அதிக எண்ணிக்கையில், ஏஐ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட புத்தகங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாகவும்,

இந்த புத்தக கொள்முதலில், பெரிய அளவில் முறைகேடுகள் நடந்துள்ளது குறித்து வழக்குப் பதிவு செய்து விசாரிக்க வேண்டும் என கடந்த 7–ஆம் தேதி, நான் லஞ்ச ஒழிப்புத் துறைக்கு அளித்த புகார் மீது இதுவரை



எந்தவொரு குற்ற வழக்கும் பதிவு செய்யப்படவில்லை என கூறப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதி வி. லட்சுமிநாராயாணன் முன் விசாரணைக்கு வந்தபோது, காவல்துறை தரப்பில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதில், புத்தக கொள்முதல் முறைகேடு தொடர்பாக ஆவணங்கள் சேகரிக்கப்பட்டு, பல அதிகாரிகள் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டுள்ள அகல்விளக்கு பதிப்பக உரிமையாளரை மோகனை காவலில் எடுத்து விசாரிக்கப்படவுள்ளார்.

இந்த முறைகேட்டில் , சிக்மா மற்றும் வித்யா ஆகியஇரண்டுபதிப்பகங்களுக்கு தொடர்புள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அகல் விளக்கு பதிப்பகத்துக்கு ரூ.1.74 கோடி பணம் வழங்கப்பட்டுள்ளது என்றும் அந்த நிறுவனத்தின் வங்கிக் கணக்கு முடக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தொடர்ந்து, லஞ்ச ஒழிப்புத்துறை தரப்பில் இந்த முறைகேடு தொடர்பாக தகவல் தெரிந்தவர்கள் முன்வந்தால், அவர்களுடைய வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படும்.

பெரியார் அறிவுலகம் மட்டுமின்றி, தமிழகத்தில் உள்ள அனைத்து நூலகங்களிலும் இதுபோன்ற புத்தகங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, கடந்த மூன்று ஆண்டுகளாக இந்த முறைகேடு நடந்துள்ளது என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த புத்தகங்கள் அனைத்தும் நூலகங்களில் இருந்து அகற்றப்பட்டுவிட்டதாகவும், உயர்நீதிமன்றம் 2024–ஆம் ஆண்டு வகுத்துக் கொடுத்த கொள்முதல் கொள்கையைப் பின்பற்றியிருந்தால், இந்த முறைகேட்டை தவிர்த்திருக்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையை உயர்நீதிமன்றம் கண்காணிக்க வேண்டும் என மதுரை அமர்வு உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும், அதுதொடர்பான உத்தரவு நகலை தாக்கல் செய்ய லஞ்சஒழிப்புத் துறை தரப்பில் அவகாசம் கேட்கப்பட்டதையடுத்து, வழக்கு விசாரணையை நவம்பர் 25–ஆம் தேதிக்கு ஒத்திவைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

சிஎஸ்ஐஆர் நெட் தேர்வு: டிசம்பர் 19, 22, 27-ல் நடத்த ஏற்பாடு!

சிஎஸ்ஐஆர் யுஜிசி நெட் தேர்வுக்கான பாடப்பிரிவு வாரியான தேதிகளை தேசிய தேர்வு முகமை (என்டிஏ) வெளியிட்டுள்ளது. தேர்வு டிசம்பர் 19, 22, 27 ஆகிய தேதிகளில் தினமும் இரு ஷிப்டுகளாக நடைபெறும்.

வாழ்வியல் அறிவியல், உயிரித் தொழில்நுட்பப் பாடங்களுக்கு டிசம்பர் 19–லும்; வேதியியல், நிலவியல், காலநிலை, கடலியல், விண்வெளி அறிவியல் பாடங்களுக்கு டிசம்பர் 22–லும் தேர்வு நடைபெறும். கணிதம் மற்றும் இயற்பியல் தேர்வுகள் டிசம்பர் 27–ல் நடைபெறுகின்றன.



திருவண்ணாமலையில் கார்த்திகை மாத பவுர்ணமி கிரிவலம் செல்ல உகந்த நேரம் அறிவிப்பு!

திருவண்ணாமலை, நவ. 23–



திருவண்ணாமலையில் அருணாசலேஸ்வரர் கோவில் பின்புறம் உள்ள மலையை சுற்றி உள்ள 14 கிலோ மீட்டர் தூரம் பவுர்ணமி நாட்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் செல் கின்றனர். இதில் கார்த்திகை தீபத் திருவிழாவின்போது மகா தீபம் ஏற்றப்படும் நாளிலும், சித்ரா பவுர்ணமி அன்றும் சுமார் 40 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கிரிவலம் செல்வார்கள்.

வழக்கமாக கார்த்தை மாதத்திற்கான பவுர்ணமி கிரிவலம் மகா தீபத்தன்று அல்லது தீபத்திற்கு மறுநாள் தொடங்கும். இந்த ஆண்டு கார்த்திகை மாத பவுர்ணமி மகா தீபத்திற்கு முந்தைய நாள் தொடங்குகிறது. அதன்படி கார்த்திகை மாத பவுர்ணமி இன்று (திங்கட்கிழமை) இரவு 11.42 மணிக்கு தொடங்கி நாளை (செவ்வாய்க்கிழமை) இரவு 8.23 மணிக்கு நிறைவடைகிறது. இந்த நேரத்தில் பவுர்ணமி கிரிவலம் செல்லலாம் என கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மகா தீபம் மற்றும் பவுர்ணமி கிரிவலம் என இந்த ஆண்டு சுமார் 50 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் திருவண்ணாமலைக்கு வருவார்கள் என்று மாவட்ட நிர்வாகத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. அதனால் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொள்ளும் பணியில் அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

பழனியில் படிப்பாதை மூடல்!

பழனி, நவ. 23–

கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு, பழனி கோயிலில் நவ. 24ல் ,பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை படிப்பாதை தற்காலிகமாக அடைக்கப்படும். தங்கத் தேர் புறப்பாடும் நடைபெறாது எனக் கோயில் நிர்வாகம் அறிவித்துள்ளது.



த.வெ.க. சார்பில் மாணவர்களுக்கு கல்வி விருது: 26, 27-ந்தேதிகளில் சென்னையில் விழா!

சென்னை, நவ. 23–



த.வெ.க. சார்பில் ஒவ்வொரு ஆண்டும் 10. 12–ம் வகுப்பு தேர்வில் மாவட்டம் மற்றும் சட்டசபை தொகுதி வாரியாக முதல் 3 இடங்களை பிடிக்கும் மாணவர்களுக்கு கல்வி விருது, உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டிற்கான முதல் கட்ட விருது மற்றும் ஊக்கத்தொகை வழங்கும் நிகழ்ச்சி கடந்த 4–ந்தேதி சென்னையில் நடந்தது.

இதில் முதலமைச்சர் விஜய் பங்கேற்று மாணவர்களுக்கு உதவித் தொகைகளை வழங்கினார். தற்போது 2–வது கட்டமாக விருது வழங்கும் நிகழ்ச்சி 26 மற்றும் 27–ந்தேதிகளில் சென்னை நீலாங்கரையில் உள்ள தனியார் மண்டபத்தில் பகல் 2.30 மணிக்கு நடக்கிறது.

26–ந்தேதி நடக்கும் கல்வி உதவித்தொகை வழங்கும் விழாவில், கோவை, ஈரோடு, திருப்பூர், நீலகிரி, பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த மாணவர்களும், 27–ந்தேதி சேலம், நாமக்கல், கரூர், திருச்சி ஆகிய மாவட்டங்களை சேர்ந்த மாணவர்களும் பங்கேற்கிறார்கள். விழாவுக்கு வரும் மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கு பிரத்யேக நுழைவுச் சீட்டு வழங்கப்படுகிறது. இதற்கான பொறுப்பு மாவட்ட செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி எம்.எல்.ஏ. விவகாரம் முதல்-அமைச்சர் விஜய் கவனத்தில் உள்ளது; அமைச்சர் அருண்ராஜ்!

சென்னை, நவ. 23–



சென்னையில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அருண்ராஜ் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:–

திமுக ஆட்சியில் பெண்கள் பாதுகாப்பு எப்படி இருந்தது என்பதை திரும்பவும் சொல்லி காட்ட விரும்பவில்லை. மக்களுக்கு தெரியும். கள்ளக்குறிச்சி கலெக்டருக்கு ஆபாச குறுஞ்செய்தி அனுப்பிய விவகாரம் குறித்து பலமுறை நாம் பேசிவிட்டோம். இது முதல்–அமைச்சர் விஜய்யின் கவனத்தில் இருக்கிறது. அது ஆராயப்பட்டு, உண்மை இருந்தால் நிச்சயம் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். எம்.எல்.ஏ. பற்றி நீதிபதி பேசியது குறித்து கருத்து கூற விரும்பவில்லை.

திமுக எந்த அளவுக்கு ஒரு பாசிச மனப்பான்மையோடு இருக்கிறது என்பதற்கு, திமுக தலைவர் மு.க.ஸ்டாலினின் பேச்சு காட்டுகிறது. சட்டசபையில் எதிர்வரிசையில் இருப்பவர்களுக்கு மூளையே இல்லாதவர்கள் என்று உதயநிதி பேசியிருக்கிறார். எந்தவிதமான மனநிலை இது. திமுகவுக்கு ஓட்டுப்போட்டவர்கள் அறிவார்ந்த மக்களா? திமுக ஓட்டுப்போடாதவர்கள் முட்டாள்களா?.

40 ஆண்டில் இல்லாத பெரிய அரசியல் புரட்சியை நாம் ஏற்படுத்தியுள்ளோம். திமுக எம்.எல்.ஏ.க்கள். ஒவ்வொருவரும், ரூ.50 கோடி செலவு செய்து விட்டு வந்துள்ளார்கள். இவர்கள்தான் அறிவாளிகளா? அவர்கள்தான் (திமுக) இந்த சமூகத்தின் நோய், சமூகத்தின் கேடு. பணம் வாங்கிக்கொண்டு ஓட்டுப்போட வேண்டும் என்று மக்களை பழக்கப்படுத்தி வைத்துள்ளார்களே, இதுதான் சமூகத்தின் மிகப்பெரிய கேடு. இதில், இருந்து மாற்றம் கொண்டு வந்துள்ளோம்.

கண்டிப்பாக, சில பிரச்சினைகள் இருந்து கொண்டு தான் இருக்கிறது. அடிப்படை காரணங்களை சரி செய்தால் தான் தீர்வு கிடைக்கும். போலீசாருக்கு முழு சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. பெண்கள் பாதுகாப்புக்கு தனி படை அமைத்துள்ளோம். எங்களின் நோக்கம் உண்மையானது. இவ்வாறு அவர் கூறினார்.

பிஸ்லெரி குடிநீரில் புரோமேட்: சட்ட நடவடிக்கைக்கு எஃப்எஸ்எஸ்ஏஐ ஒப்புதல்!



பிஸ்லெரி பாட்டில் குடிநீரில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக புரோமேட் இருப்பதாக இரண்டு கட்ட ஆய்வகப் பரிசோதனைகளில் கண்டறியப்பட்டதாக எஃப்எஸ்எஸ்ஏஐ தெரிவித்துள்ளது. இதையடுத்து நிறுவனத்தின் மீது சட்ட நடவடிக்கை எடுக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலம் புரோமேட் உடலில் சேர்ந்தால் சிறுநீரகம், நரம்பு மண்டலம் பாதிக்கப்படுவதுடன் புற்றுநோய் அபாயமும் ஏற்படலாம் எனக் கூறப்படுகிறது. விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளிப்பதாக பிஸ்லெரி நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும், அனைத்து பாட்டில் குடிநீர் நிறுவனங்களின் தயாரிப்புகளையும் ஆய்வு செய்ய உணவுப் பாதுகாப்பு ஆணையம் முடிவு செய்துள்ளது.

தமிழ்நாட்டில் மேலும் ஒரு தடையற்ற சுங்கச்சாவடி!



சென்னை, நவ. 23–

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் நாடு முழுவதும் தடையற்ற சுங்கச்சாவடிகளை அமல்படுத்தி வருகிறது.

அங்கு வாகனங்களை நிறுத்தாமல் வேகமாக கடந்து செல்லலாம். தமிழ்நாட்டில், முதலில் பரனூர் சுங்கச்சாவடியும், 2–வதாக நெமிலி சுங்கச்சாவடியும் தடையற்ற சுங்கச்சாவடிகளாக மாற்றப்பட்டன. இந்நிலையில், ராணிப்பேட்டை மாவட்டம் தேசிய நெடுஞ்சாலை எண் 48–ல் கரைப்பேட்டை – வாலாஜாபேட்டை பிரிவில் சென்னசமுத்திரத்தில் 3–வது தடையற்ற சுங்கச்சாவடி அமலுக்கு வந்துள்ளது. இதனால், சென்னை–பெங்களூரு இடையே வேகமாக பயணிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வானில் தோன்றும் பிரமாண்ட 'பீவர் சூப்பர் மூன்'



வருகிற டிசம்பர் 24–ந் தேதியும் மற்றொரு சூப்பர் மூன் தோன்றவுள்ளது என்று பிர்லா கோளரங்க வானியல் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

வானில் நாளை 'பீவர் சூப்பர் மூன்' எனப்படும் பிரமாண்ட முழு நிலவு தோன்றவுள்ளது. இந்த அரிய வானியல் நிகழ்வு இந்திய நேரப்படி அன்று இரவு 8.23 மணிக்கு நிலவு தனது முழுமையான ஒளியை அடையும். சூரியன் மறைவுக்குப் பிறகு கிழக்கு வானில் நிலவு உதிக்கும்போதே இதனை மிகத் தெளிவாகப் பார்க்க முடியும்.

நிலவு தனது சுற்றுப்பாதையில் பூமிக்கு மிக அருகில் (சுமார் 3 லட்சத்து 60 ஆயிரத்து 765 கி.மீ தொலைவில்) வருவதால், வழக்கமான முழு நிலவை விட 14 சதவீதம் பெரியதாகவும், 30 சதவீதம் அதிகப் பிரகாசமாகவும் காட்சியளிக்கும்.

நவம்பர் மாதத்தில் வரும் முழு நிலவு பாரம்பரியமாக 'பிரமாண்ட சூப்பர் மூன்' என்று அழைக்கப்படுகிறது. குளிர்காலத்திற்கு முன்பாக நீர்நாய்கள் தங்களின் இருப்பிடங்களைத் தயார்படுத்தும் காலம் என்பதால் இப்பெயர் வந்தது. அடுத்தடுத்து வரவிருக்கும் சூப்பர் மூன் வரிசையில் இது முதல் நிகழ்வாகும்.

இதனைப் பார்ப்பதற்குத் தொலைநோக்கி எதுவும் தேவையில்லை. வானம் மேகமூட்டமின்றித் தெளிவாக இருந்தால் வெறும் கண்களாலேயே பார்த்து ரசிக்கலாம். இதனைக் காண மாணவர்கள், பொதுமக்கள் ஆர்வமாக உள்ளனர். இதைத்தொடர்ந்து வருகிற டிசம்பர் 24–ந் தேதியும் மற்றொரு சூப்பர் மூன் தோன்றவுள்ளது என்று பிர்லா கோளரங்க வானியல் விஞ்ஞானிகள் கூறினர்.



Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.182, Vakkil New Street, Simmakkal, Madurai –625 001. Published by Dr.P.Pandiarajan, No.182, Vakkil New Street, Simmakkal, Madurai –625 001. Editor. Dr. P. Pandiarajan. TN/WPP–143/SR/2018–2020